# Church of the Assumption, PJ

யோவான் 4 : 5 - 52

துணைத் தலைப்பும் சிந்தனையும் :

நம்பிக்கை தரும் வாழ்கையின் குடிநீர்; யாதார்த்தங்களை உண்மையுடன் எதிர் கொள்ளுதல்.

நடவடிக்கை: நமது ஆசைகள் ஆன்மீக படைப்புக்களின் வழியே.

இன்று, வித்தியாசமான வழியில் ஒரு சமாரிய பெண்ணை எதிர் கொள்கிரார். கோதுமை பயிர் நடவும் சிக்கார் எனும் ஊரில் இஸ்ரேலிய தேச பக்தரான ஜேக்ப்பு கிணறு தோண்டி கொண்டிருக்கும்போது நடந்தது....

இயேசு கோரினார், " குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும்."

உணவு, குடிநீர் மற்றும் உறவு ஆகியவை மனித ஆசைக்கு உட்பட்டது.

( யூதர்கள் சமாரியர்களோடு பொதுவாக பகிர்ந்து கொள்வதில்லை.) சமாரியப் பெண் தளவாட பொருகட்கள் இன்றி இருந்தார்கள்." ஐயா தண்ணீர் மொள்ள ஒன்றுமில்லை, கிணறு ஆழமானது." இயேசு ...இடமோ நேரமோ ஆகியவற்றிக்கு கட்டுபடவில்லை.குறிப்பாக செய்தியின் மீது ஆர்வம் கொண்டிருந்தார்.

"இந்தத் தண்ணீரைக் குடிக்கும் ஒவ்வொருவருக்கும் மீண்டும் தாகம் எடுக்கும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது; நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்.'

ஒரு மனிதனுக்கு உணவும் குடிநீரும் உடலுக்கு தேவையான நிலையல்ல. மாறாக இயேசு ஆன்மீக வழியில் படைத்தவருடன் ஒன்றிணைய அதன் தேவைகைளை உணர வைக்கிறார். ஆண்டவர் சவாலுக்கு மேல் ஏற்பவர்.

இயேசு சமாரியப் பெண்ணின் வார்த்தைகளை இவ்வாறு கையாள்கிறரர்: கிணற்று நீருடன் தண்ணீர். கிணற்று நீர் தழும்பாது , உயிரற்றது. ஓடும் நீர் உயிரோட்டம் கொண்டது. இந்த உயிரோட்ட நீர் வாழ்க்கையின் அர்த்தங்களை உணர வைக்கிறது.

1. அர்த்தமுள்ள உண்மையான வாழ்க்கை இயல்பு

11. முடிவில்லா ஆண்டவரின் இல்லத்தில் ஆசீர்

துணைத் தலைப்பும் சிந்தனையும்:

நம்பிக்கையைத் தரும் வாழ்க்கையின் குடிநீர் .யாதார்த்தங்களை எதிர்கொள்ளுதல்.

பாதுகாக்கப்பட வேண்டிய வளங்களில் , நம்பிக்கை ஊட்டும் குடிநீரும் ஒன்றாகும். மலேசிய நாடு இயற்க்கையிலே மிகுந்த நீர்வளம் நிறைந்த நாடாகும். சொல்ல இயலாத சில பிரச்சினைகள், சிலாங்கூர் மாநிலத்தில் இருக்கின்றன. நீர் பற்றாக்குறை காற்றுத்தூய்மையின்மை இருந்தாலும் இதை உணர்ந்து பாதுகாப்பு நடவடிக்கை நாடு அணுக வேண்டும். நீர் கிடைக்கிறது என இருக்கக்கூடாது.

முரண்பாடான கருத்து,

இமய மலையில் பனியில் தேக்கும் நீர்படலங்களை ....விஞ்ஞான வழியில். கூம்பு போன்று செயற்கை தூபங்களை அமைத்து நீர் பாதுகாக்கப்படுகிறது. கோடைக்காலத்தில் நீர் உருகி வர பயன் படுத்துகின்றனர். மேலும் விவசாய தேவைகளுக்கு பூர்த்தி செய்கின்றனர். குறிப்பாக இந்திய நாட்டு மக்கள் நீரின் அருமையை உணர்ந்துள்ளனர்.

செயல் நடவடிக்கை: ஆண்டவர் ஆன்மீக வழியில் எல்லா படைப்புக்கைளையும் காண்கிறார்.

"சூரியனைப் பற்றி சிறுபாடல்" இப்பாடலை இயற்றியவர் மார்டி கோகன். அசிசியின் புனித பிரான்சிஸ் இசையமைத்து இயற்க்கையோடு ஒப்பிட்டு சீர்தூக்கிப் பார்க்கிறார்.

கடவுளின் மகிமை சொர்க்கத்தில் ஆர்ப்பரிக்கப்படுகிறது.

எல்லா படைப்புக்களும் மகிழ்ச்சியில் முழங்கப் படுகிறது.

வாருங்கள் வனத்தில் நடனம் ஆடுவோம்

வாருங்கள் திடலில் விளையாடுவோம்

ஆண்டவரின் மகிமையை பாடுவோம் பாடுவோம்

தினம் ஒளி கொடுக்கும்

சூரியனைப் போற்று

நிலாவும் நட்சத்திரங்களும் ஒளி கதிர்கள் வீச

சிம்மாசனத்திற்கு பயணிக்க வழிவிடுகிறது!

சமநிலையில் பரந்த வளங்களை பாவித்துள்ளோம், எடுத்ததை திரும்ப கொடுக்க இயலாது. தூக்கி எரியும் கலாச்சாரத்தைக் கொண்டவர்கள் நாமில்லை. சுற்றுச்சூழல் நிலை மனமாற்றத்தை அறிய "லாடத்தோ சி" எனும் நூலிருந்து கீழே காண்போம்:

சுற்றுச் சூழல் நிலை மனமாற்றம்

" இப்பேர்பட்ட உயர்ந்த கொள்கைகளை ஆன்மீகமாக நாம் ஏற்றுக் கொள்ளும் போது நீடித்த நிரந்தர பலனை உருவாக்க வல்லமையாக மாறிவிடுகின்றன. இயற்க்கை ஆன்மீகத்திற்கு மனித உள்ளங்களை ஊடுருவி நல்ல செயல்பாடுகளைத் தூண்டும் சக்தி உள்ளது. தனிமனித செயல்பாடுகள், சமுதாய செயல்பாடுகள் போன்ற சீரிய முயற்சிகளுக்கு தைரியத்தையும் தூண்டுதலையும் ஒத்துழைப்பையும் தந்து மனித வாழ்வின் உண்மையான அர்த்தங்களையும் கண்டு கொள்ள இயற்கை ஆன்மீகம் உதவி புரியும்."

இதுவரை கிறிஸ்துவ மக்கள், கடவுள் தாயாகிய திருச்சபைக்குக் கொடுத்துள்ள மாபெரும் கொடைகளை உபயோகித்து தங்களது வாழ்க்கையில் முன்னேற்றம் காண தவறிவிட்டிருக்கிறார்கள். திருச்சபையின் வரலாற்றில் நாம் போற்றி கொண்டாடும் ' பரிசுத்த ஆவி எனும் ஆவியானவர் ' எப்போமே படைப்பிலே இருந்து வருகிறார். நம்மிலே வாழந்து வருகிறார். இப்புவியில் குடிகொண்டிருக்கிறார். சுற்றுச்சூழலில் எங்கும் வியாபித்து உள்ளார் . "

உலகலாவிய அளவில் பாலைவனங்கள் உருவாவது அதிகரித்து வருகிறது. ஏனென்றால் மனித உள்ளங்கள் பாலைவனங்களாக மாறி விட்டன.

"சூழ்நிலை சீர்கேடு ஒரு சிறிய உள்ளார்ந்த மனமாற்றத்திற்கு நம்மை அழைக்கிறது. ஒரு சிலர் நல்ல கிறிஸ்துவ மக்கள் சுற்றுச்சூழல் சீர்கேட்டை நம்பாமல் , அப்படி நம்பினாலும் தங்களால் ஒன்றும் செய்ய முடியாது எனும் அவநம்பிக்கையால் உந்தப் பட்டு மற்றவர்கள் அந்தச் சூழல் நலனில் எடுத்துக்கொள்ளளும் முயற்சிகளைப் பரிகசித்து வருகின்றனர். மற்றவர்கள் எது நடந்தாலும் நடக்கட்டும் என உதாசீனப் படுத்தும் போக்கில் அவர்களுடைய வழக்கமான பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ளாமலும் இருந்து வருகிறார்கள்.

மேற்குறுப்பிட்ட அனைவருக்கும் உடனடியாகத் தேவைப்படுவது சூழியியல் மனமாற்றம் மட்டுமே. இந்த மனமாற்றத்தில் சுற்றுச்சுழலோடு தாங்கள்

வைத்துள்ள உறவானது இயேசு கிறிஸ்துவோடு தாங்கள் வைத்துள்ள உறவுக்குச் சமமே என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.கடவுளுடைய படைப்பாகிய சுற்றுச்சூழலைப் பேணிக் காப்பது ஒரு மாபெரும் புண்ணியமே என்றும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது கிறிஸ்தவர்களுக்கு கடவுள் கொடுத்த மாபெரும் அழைப்பு என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது."